# DEPOSITION OF WITNESS

**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,**
**FAST TRACK COURT AT MAGISTERIAL LEVEL,PATTUKKOTTAI**

| | |
|---|---|
| **STC. No.** | **149/2023** |
| **DW1 –** | **அஷரப் அலி** |
| தந்தை பெயர் | **மீரா முகைதீன்** |
| **வயது** | **35/2025** |
| முகவரி | **கடற்கரை தெரு, அதிராம்பட்டினம்** |
| தாலுக்கா | **பட்டுக்கோட்டை** |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of **11th day of September 2025**

**ஆரம்பிக்கப்பட்ட நேரம் 12:11 PM**

**எதிரி தரப்பு முதல் விசாரணை**

**(சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் எடுப்பதற்கு நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட நீதிமன்ற அலுவலரான திரு. S. குமார், (பலகை எழுத்தர் நிலை-3) என்பவரால் சாட்சியிடம் சத்தியபிராமாணம் எடுக்கப்பட்டது)**

1. புகார்தாரரை எனக்கு தெரியும். அவர் எதன் சம்பந்தமாக வழக்கு தொடுத்துள்ளார் என்ற விபரம் எனக்கு தெரியும். நான் புகார்தாரரிடம் ரூ.1,87,000/- ( ஒரு இலட்சத்து என்பத்து ஏழாயிரம்) மட்டும்தான் கடன் வாங்கினேன். அதற்காக நல்ல பழக்கம் என்பதால் நம்பின்கையின் அடிப்படையில் ஒரு காசோலை கொடுத்தேன். அந்த காசோலையின் எண் எனக்கு ஞாபகம் இல்லை. ஆனால், அந்த காசோலையில் என்னுடைய கையொப்பம் மட்டும் இட்டு கொடுத்தேன. நான் பெற்ற ரூ.1,87,000/- ( ஒரு இலட்சத்து என்பத்து ஏழாயிரம்) கடனிற்கு ரூ.1,10,000/- ( ஒரு இலட்சத்து பத்தாயிரம்) ரூபாயை கொடுத்துவிட்டேன். அந்த ரூ.1,10,000/- ( ஒரு இலட்சத்து பத்தாயிரம்) ரூபாயை மூன்று தவனையாக கொடுத்தேன். அதில் முதல் தவனையில் ரூ.40,000/- ரூபாயை புகார்தாரரின் அலுவலகத்தில் வைத்து என்

நண்பரான அப்துல்லா என்பவரின் முன்னிலையில் வைத்து கொடுத்தேன். இரண்டாவது தவனை ரூ.20,000/- ரூபாயை புகார்தாரரின் அலுவலகத்திற்கு கீழே வைத்து என் நண்பரான மகரூப் என்பவரின் முன்னிலையில் வைத்து கொடுத்தேன். மூன்றாவது தவனையாக ரூ.50,000/- ரூபாயை என் நண்பர்களான ஜபருல்லா, பி.எல். ஜலாலுதின், ஜகபர் என்பவர்களின் முன்னிலையில் வைத்து மல்லிப்பட்டினத்தில் புகார்தாரருக்கு கொடுத்தேன். நான் மொத்தம் இன்னும்ரூ.77,000/- ம்தான் பாக்கி கொடுக்க வேண்டியிருக்கிறது.கையெழுத்து நிபுனர்களை வைத்து ஆராய்ந்தால் Cheque ல் பூர்த்தி செய்திருக்கும் எழுத்துக்கள் என்னுடையது அல்ல என்பது தெரியவரும். நான் யார் முன்னிலையில் வைத்து பணம் கொடுத்தேனோ அவர்களை விசாரித்தால் உண்மைத்தன்மை தெரியவரும். ஷேக் முகைதீன் என்ற நபரை எனக்கு தெரியாது, அவரை வைத்து புகார்தாரரிடம் நான் பணம் ஏதும் வாங்கவில்லை. ரூ.1,87,000/- ( ஒரு இலட்சத்து என்பத்து ஏழாயிரம்) ரூபாயை நான் வங்கி கணக்கில்தான் வாங்கினேன், அதற்கான பரிவர்த்தனை ஆதாரம் என்னிடம் உள்ளது. இது பொய்யான வழக்கு, என்னை இவ்வழக்கில் இருந்து விடுவிக்க நான் பிரார்த்திக்கிறேன்.

**முடிக்கப்பட்ட நேரம் 12:28 PM**

மேற்கண்ட சாட்சியமானது திறந்த நீதிமன்றத்தில் சாட்சியானவர் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து / படிக்க கேட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையெழுத்து / கைரேகை செய்யப்பட்டது.

ஒம்/-திரு. மா. விசால் ஆனந்த்
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம், (நடுவர் நிலை)
பட்டுக்கோட்டை.